# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,339 — 1937 ம் ௵ மார்கழி௴ 23 ந் திகதி, வியாழக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

M. L. A.—B 1366.

1893 ம் ஆண்டின் இறைச்சிக்காரர் சட்டம்.

ஒழுக்கவிதிகள் உண்டாக்கும் காரியத்துக்கான தக்க அதிகாரத்தரால், அதாவது, சலாபப்பட்டண மண்டல சபையாரால் 1893 ம் ஆண்டின் இறைச்சிக்காரர் சட்டத்தின் 23 ம் பிரிவின்படி உண்டாக்கப்பட்டு, மேற் சொல்லிய 23 ம் பிரிவினாலும் இலங்கை இராச்சிய மந்திரசபை சம்பந்தமாக 1931 ம் ஆண்டில் ஆலோசனைச் சபையிற் செய்த கட்டளையின் 93 ம் அமிசத்தினாலும் தம்மீது வைக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட ஒழுக்கவிதிகள்.

எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரனாயக,
சுவஸ்தான காரிய பரிபாலன மந்திரி.

கொழும்பு, 1937 ம் ௵ டிசெம்பர்௴ 20 ந் உ..

ஒழுக்கவிதிகள்.

1. சட்டத்தின் 22 ம் பிரிவின்படி பிரசித்தம்பண்ணப்பட்ட மாடாடிக்கும் பொதுக் கொட்டில் சலாபப் பட்டண மண்டல சபையின் சௌக்கியாதார பரிசோதகரின் பொறுப்பில் இருத்தல் வேண்டியதுமன்றி, அவரே அவ்விடத்தில் விதிக்கமைதல் இருக்கும்படியும் அவ்விடம் சௌக்கியாதார நிலையில் வைத்துக்கொள்ளும்படியும் செய்வதற்கு உத்தரவாதமுடையவராயிருத்தலும் வேண்டும்.

2. (1)—

(a) அடிக்கப்படும்படி கொண்டுவரப்பட்டிருக்கும் மிருகங்களைப் பார்த்துச் சோதிப்பதற்குச் சபையாரால் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகஸ்தர் மிருகத்தைப் பார்த்துச் சோதித்து அது மனுஷ சாப்பாட்டுக்காக அடிக்கப்படுவதற்கு ஏற்றதென்று அனுமதி கொடுக்கும் வரையிலும் ; அல்லது

(b) முற்பகல் 7 மணிக்கும் முற்பகல் 9 மணிக்குமிடையிலன்றியும் ; ஒருவரும் மாடாடிக்கும் கொட்டிலில் ஒரு மிருகத்தையும் அடிக்கப்படாது.

ஆயின், இதிலே விவரமாகக் குறிக்கப்பட்டுள்ள நேரங்களிலன்றி மற்றெந்த நேரத்திலும் எந்த மிருகத்தையும் அடிக்கலாமென்று அக்கிராசனர் எந்த விஷயத்திலும் உத்தரவு கொடுக்கலாம்.

(2)—

(a) (1) ம் வாக்கியத் தொகுதியின்படி எந்த மிருகத்தையும் அடிக்கலாமென்று அனுமதி கொடுத்து 72 மணித்தியாலம் கழிந்ததின் மேல் எந்த நேரத்திலாவது, அல்லது

(b) (1) ம் வாக்கியத்தொகுதியின்படி அதை அடிக்கலாமென்று அனுமதி கொடுத்ததின்மேல் மாடாடிக்கும் கொட்டிலிலிருந்து அதை உயிரோடே வெளியே கொண்டுபோனாலாவது,

அந்த வாக்கியத்தொகுதியின்படி அம்மிருகத்தை மறுபடியும் பார்த்துச் சோதித்து மனுஷ சாப்பாட்டுக்காக அடிப்பதற்கு அது ஏற்றதென்று அனுமதிகொடுத்தாலன்று மற்றப்படி ஒருவரும் மாடாடிக்கும் கொட்டிலில் ஒரு மிருகத்தையும் அடிக்கப்படாது.

3. மாடாடிக்கும் கொட்டிலிருக்கும் வளவுக்குள் எந்த மிருகத்தையும் கொண்டுவரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் அவ்வளவுக்குள் நிற்கும்வரையிலும் அதற்குப் போதிய தீனும் தண்ணீரும் நிச்சயமாகக் கிடைக்கும்படி செய்வதற்கு வேண்டிய எல்லா ஒழுங்குகளையும் செய்து கொள்ள வேண்டும்.

4. மாடாடிக்கும் கொட்டிலிருக்கும் வளவுக்குள் எந்த மிருகத்தையும் கொண்டுவரும் ஒவ்வொருவரும் அம்மிருகம் இறைச்சிக்கு அடிக்கப்படுவதற்கு உதவாதென்று தள்ளிவிடப்படுமாகில், அம்மிருகம் உதவாதென்று தள்ளிவிடப்பட்டவுடன் அவ்வளவிலிருந்து கொண்டுபோய்விட வேண்டும் அல்லது கொண்டுபோகப்படும்படி செய்தல் வேண்டும்.

5. எந்த மிருகத்தின் விஷயத்திலும் 2. ம் ஒழுக்கவிதியின்படி அனுமதி கொடுக்கப்பட்டதின்மேல் அம்மிருகம் நோயுள்ளது அல்லது மனுஷ சாப்பாட்டுக்காக அடிக்கப்படுவதற்கு உதவாதென்று காணப்படுமாகில், சலாபச் சுகாதார வைத்திய உத்தியோகஸ்தர் அல்லது 2 ம் ஒழுக்கவிதியிற் சுட்டிய உத்தியோகஸ்தர் அம்மிருகத்தையும் அடிக்கப்படாதென்று தடுக்கலாம்.

6. மாடாடிக்கும் கொட்டிலில் அடிக்கப்பட்ட எந்த மிருகத்தினதும் மாமிசமாவது கழிவு மாமிசமாவது, சுகாதார வைத்திய உத்தியோகஸ்தரின் அல்லது 2 ம் ஒழுக்கவிதியிற் சுட்டிய உத்தியோகஸ்தரின் அபிப்பிராயப்படி நோயுள்ளது அல்லது மனுஷ சாப்பாட்டுக்கு உதவாதென்று காணப்படுமாகில், அவர் அம்மாமிசம் அல்லது கழிவுமாமிசம் உடனே அழித்துவிடப்படும்படி அல்லது அது விற்பனவுக்கென்று வைக்கப்படாதபடி அல்லது மனுஷ சாப்பாட்டுக்காகப் பாவிக்கப்படாதபடி தடுக்கும் பொருட்டாக அதைத் தொலைத்துவிடும்படி செய்தல் வேண்டும்.

7. மாடாடிக்கும் கொட்டிலின் பொறுப்பேற்றிருக்கும் உத்தியோகஸ்தர் மனுஷ சாப்பாட்டுக்காக அடிக்கப்படுவதற்கு ஏற்றதென்று அனுமதி கொடுக்கப்படாத அல்லது அடிககப்படாதென்று 5 ம் ஒழுக்கவிதியில் ஏற்படுத்தியிருக்கும் வண்ணம் தடுக்கப்பட்ட எந்த மிருகத்தையும் அடிக்க உத்தரவு கொடுக்கப்படாது.

8. (1) சுகாதார வைத்திய உத்தியோகஸ்தர் அல்லது 2 ம் ஒழுக்கவிதியிற் சுட்டிய உத்தியோகஸ்தர் கற்பிக்கும் பிரகாரப்படியன்றி மற்றப்படி ஒருவரும் மாடாடிக்கும் கொட்டிலிலிருந்து 6 ம் ஒழுக்கவிதியின்படி மனுஷ சாப்பாட்டுக்கு உதவாதென்று சொல்லப்பட்டிருக்கும் இறைச்சி அல்லது கழிவு மாமிசம் எதையும் கொண்டுபோகப்படாது.

(2) மாடாடிக்கும் கொட்டிலின் பொறுப்பேற்றிருக்கும் உத்தியோகஸ்தரால் மாமிசத்தின் முற்பக்க நாலிலொரு பாகங்களிலும் பிற்பக்க நாலிலொரு பாகங்களிலும் (U. D. C. Chilaw,) என்னும் அடையாளம் முத்திரையிடப்படும் வரையிலும் மனுஷ சாப்பாட்டுக்கென்று வைத்திருக்கும் எம்மிருக மாமிசத்தையும் மாடாடிக்கும் கொட்டிலிலிருந்து ஒருவரும் கொண்டுபோகப்படாது.

9. வேறு மிருகம் எதுவும் நிற்கும் வேளையிலாவது அவ்விடத்தில் அதற்குமுன் அடிக்கப்பட்ட மிருகங்களின் ஒவ்வொன்றினதும் மாமிசம் அவ்விடமிருந்து கொண்டுபோகப்பட்டு அல்லது மறைக்கப்பட்டு இடமும் சுத்தமாக்கப்படும் வரையிலும் மாவது ஒரு மிருகமும் அடிக்கப்பட லாகாது.

10. (1) மாடாடடிக்கும் கொட்டிலில் மாடாடிப்பதற்கு பின்வரும் வீதப்படியான வேதனம் முற்பணமாகச் சபைக்குக் கொடுக்கப்பட வேண்டியதுமன்றி, அவ்வேதனம் கொடுக்கப்பட்டதென்பதற்கு அத்தாட்சியாக அதிகார முறையாகக் கொடுக்கப்பட்ட ஒரு பற்றுச்சீட்டில்லாமல் ஒரு மிருகத்தையும் அங்கே அடிக்கவிடவும்படாது :—

| | | ரூ. ச. |
|---|---|---|
| மாடுகளுக்கு .. .. | ஒவ்வொன்றுக்கும் .. | 0 50 |
| செம்மறியாடுகளுக்கு அல்லது வெள்ளாடுகளுக்கு | ஒவ்வொன்றுக்கும் .. | 0 25 |

இந்த வீதங்கள் 24 மணித்தியாலங்களுக்கு சரியான இடத்தில் வெளியாக வைப்பதற்கு வருஞ் செலவையும் அடக்கும். 24 மணித்தியாலங்களுக்கு மேற்படாதபடி இன்னும் வெளியாக வைக்கப்படும் நேர வெல்லைகளுக்கு மேற்சொல்லிய வீதங்களின் அரைவாசிப்படியாக மேலதிக வீதம் கொடுக்கப்படல் வேண்டும்.

(2) மனுஷ சாப்பாட்டுக்காக அடிக்கப்படுவதற்கு ஏற்றதென்று ஒரு மிருகத்தின் விஷயத்தில் 2 ம் ஒழுக்கவிதியின்படி அனுமதிகொடுக்கப் பட்டிருக்குமிடத்து, தொழுவத்துக்குள் அம்மிருகத்தை விடுவதற்குமுன் வேதனம் கொடுபட்டதென்பதற்கு அத்தாட்சியாக அதிகாரமுறையாகக் கொடுக்கப்பட்ட ஒரு பற்றுச்சீட்டுக் கொண்டுவந்து காட்டப்பட வேண்டுமென்பது அவசியமாகாதிருத்தல் வேண்டும்.

11. தொழுவக் காவலாள் மாடாடடிக்கும் கொட்டிலுக்குக் கொண்டு போகப்படும் எல்லா மாடுகளையும்பற்றி பின்வரும் மாதிரிப்பத்திரப்படி ஒரு பதிவு டாப்பு எழுதிவைத்து வரவேண்டும் :—

| மாட்டுத் துண்டின் இலக்கம் | இனம் | நிறம் | வயசு | சுட்டுக் குறி யடையாளங்கள் | | இறைச்சிக்காரனின் பெயர் | தொழுவத்தில் விட்ட சேரும் தேதியும் | பார்த்துச் சோதித்த தேதி | கொண்டுபோன தேதி | குறிப்புரைகள் | மாட்டை ஏற்றும் உத்தியோகத்தர் பெயரும் கையெழுத்தும் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | வலது பக்கம் | இடது பக்கம் | | | | | | |
| | | | | | | | | | | | |

12. சலாபச் சுவஸ்தான சுகாதார சங்கத்தாரால் உண்டாக்கப்பட்டு, 1921 ம் ஸு மார்சமீ 11 ந் தேதியைக்கொண்ட 7,161 ம் இலக்கக் கசெற் பத்திரிகையிற் பிரசித்தப்படுத்தப்பட்டு, 1920 ம் ஆண்டின் 11 ம் இலக்க, சனுதிகார ஆட்சிச் சட்டத்தின் 247 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பலத்தைக்கொண்டு பெலமுற்று வழங்கிவருவனவாக மதிக்கப்படும், சட்டத்தின் 23 ம் பிரிவின்படியான விதிகளும் ஒழுக்கவிதிகளும் இதனுல் நிவாரணமாக்கப்படுகின்றன.

## காணி விற்பனவுகள்.

**Puttalam No. 83.**—1938 ம் ஆண்டு மாசிமீ 25 ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு புத்தளம் கச்சேரியில் வடமேல் மாகாணத்து புத்தளம் சலாபம் பிரிவுகளின் கவற்ணமேந்து உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

5 காணித்துண்டுகள், வடமேல் மாகாணத்து புத்தளம் பிரிவு புத்தளம் பற்றும் கிறவெறஸ் பகுதிகளிலிருக்கின்றன.

பிளான் இலக்கம் 6,431. குறிச்சி—மகாசெம்புக்குளிய. உரித்தாளி—அரசாட்சியார்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேளவிக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. று. ப. | தரிப்புவிலை எக்கர் ஒன்றுக்கு. ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | செம்புக்குளியவத்தை .. | — .. | காலஞ்சென்ற ஜீ. எம். பெறேரு சேர்த்து அடைத்த தென்னந் தோட்டம் | 0 1 21 | 16·59* முழுவதற்கும் |
| 2 | ௸ .. | — .. | ௸ .. .. | 0 0 26 | |
| 3 | ௸ .. | — .. | ௸ .. .. | 0 0 16 | |
| 16 | கரசிக்குளம்வத்தை .. | — .. | காலஞ்சென்ற ஜே. டீ. லாசறஸ் சேர்த்து அடைத்த தென்னந் தோட்டம் | 0 1 23 | 5·91* முழுவதற்கும் |

பிளான் இலக்கம் A 292. குறிச்சி—புத்தளம் தெற்கு. உரித்தாளி—அரசாட்சியார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | அந்தோனி அம்மா தோட்டம் | — .. | மிக்கேல் அந்தோனிப்பிள்ளை சேர்த்தடைத்த பாழ்நிலம் .. | 0 0 1·02 | 2* முழுவதற்கும் |

1937 ம் ஆண்டு கார்த்திகைமீ 19 ந் திகதியின் 8,331 ம் இலக்க கசெற்றில் பிரசுரித்த விளம்பரம் (இல. 79) அழிக்கப்பட்டது.

* 380 ம், 386 ம் இல. காணிச் சட்டத்தின்படி தீர்ப்பதற்கு.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1937 ம் ஆண்டு மார்கழிமீ 16 ந் உ.

வீ. குமாரசுவாமி,
எக்ரிங் காணிக் கொம்மிஷனர்.

---

**Puttalam No. 84.**—1938 ம் ஆண்டு மாசிமீ 25 ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு புத்தளம் கச்சேரியில் வடமேல் மாகாணத்து புத்தளம் சலாபம் பிரிவுகளின் கவற்ணமேந்து உதவி ஏசன்றவர்களால் இதனடியிற் சொல்லப்பட்டிருக்கிற முடிக்குரிய காணித்துண்டுகளை, அரசாட்சியாரால் காணி விற்பனவைப்பற்றி செய்யப்பட்டிருக்கும் ஒழுங்குகளின் பிரகாரம் ஏலத்திற் கூறி விற்கப்படும் அல்லது தீந்துவிடப்படும் அல்லது வேறு மாதிரியாக விற்கப்படும்.

ஒரு காணித்துண்டு, வடமேல் மாகாணத்து புத்தளம் பிரிவு, டெமலஹற்பற்று பகுதியிலிருக்கின்றது.

பிளான் இலக்கம் A 493. குறிச்சி—தென்னக்குறியாவா ஆனைமடுவா. உரித்தாளி—சலாபக்குடி, ஸ்ரீ ஜே. சவரிமுத்துவும் அரசாட்சியாரும்.

| காணித் துண்டின் இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விபரம். | விசாலம். ஏ. று. ப. | தரிப்புவிலை எக்கருக்கு ரூ. |
|---|---|---|---|---|---|
| 2 | தென்னன்குறியாவேவெல .. | — .. | நெற்காணி .. .. | 1 0 26 | 20·34* முழுவதற்கும். |

1937 ம் ஆண்டு கார்த்திகைமீ 19 ந் திகதியின் 8,331 ம் இலக்க கசெற்றில் பிரசுரித்த 79 ம் இலக்க காணி விற்பனவு விளம்பரம் இத்தால் அழிக்கப்பட்டது.

* 380 ம், 386 ம் காணிச்சட்டங்களின்படி தீர்ப்பதற்கு.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1937 ம் ஆண்டு மார்கழிமீ 16 ந் உ.

வீ. குமாரசுவாமி,
எக்ரிங் காணிக் கொம்மிஷனர்.

## அரசாட்சியாரின் தேவைக்கான காணி விளம்பரம்.

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சிலாபம் வத்தக்கலை ஓடையில் மலேறியாவைத் தடுக்கும் வழிவகைகள் செய்வதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

A 466 ம் இல. பிரதமபடம். சங்குத்தான் கிராமம்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 2 | சங்குட்டான்தரவை .. | பாழ்நிலம் .. | தெரியாது .. .. .. | 0 | 0 | 3·9 |
| 3 | தாண்டிமரத்தடித்தோட்டம் | தென்னந்தோட்டம் .. | கொச்சிக்கடைக்குடி எம். ஆர். எம். நல்லையா .. .. | 0 | 0 | 13·4 |
| 4 | போறன்கும்புற .. | நெற்காணி .. | (1) சலாபக்குடி வெள்ளைசாமி முதலாளி, (2) கொச்சிக்கடைக்குடி எம். ஆர். எம். நல்லையா, (3) சங்குட்டான்குடி சேகு இஸ்மாயில் சுபேரியா உம்மா, (4) (சலாப) அளுத்வத்தைக்குடி எஸ். ஜே. பறனுந்து, (5) சலாபக்குடி ஜே. ஜே. பறனுந்து, பிரக்கிராசி, (6) சலாபக்குடி எஸ். பீ. பறனுந்து | 0 | 0 | 9·9 |
| | A 466 ம் இல. பிரதமபடம். ஈச்சம்பிட்டி (ஓர் பாகம்) கிராமம். | | | | | |
| 5 | போறன்கும்புற .. | தோட்டம் .. | (1) சலாபக்குடி வெள்ளைசாமி முதலாளி, (2) கொச்சிக்கடைக்குடி எம். ஆர். எம். நல்லையா, (3) சங்குட்டான்குடி சேகு இஸ்மாயில் சுபேரியா உம்மா, (4) (சலாப) அளுத்வத்தைக்குடி எஸ். ஜே. பறனுந்து, (5) சலாபக்குடி ஜே. ஜே. பறனுந்து, பிரக்கிராசி, (6) சலாபக்குடி எஸ். பீ. பறனுந்து | 0 | 0 | 6·3 |
| | A 466 ம் இல. பிரதமபடம். ஈச்சம்பிட்டி (சலாப நகரசங்க எல்லைகளுள்ளிருக்கும் ஓர் பாகம்) கிராமம். | | | | | |
| 6 | தாண்டிமரத்தடித்தோட்டம் 94/2, 94/3 (235) இல. வரிகட்டும் காணிகளின் பாகம் | தென்னந்தோட்டம் .. | கொச்சிக்கடைக்குடி எம். ஆர். எம். நல்லையா .. .. | 0 | 0 | 8·8 |
| 7 | வண்டிற்பாதை .. | வண்டிற்பாதை .. | (1) ஈச்சம்பிட்டிக்குடி ஈ. தம்பிலெவ்வை, (2) கொச்சிக்கடைக்குடி எம். ஆர். எம். நல்லையா | 0 | 0 | 1·1 |
| 9 | கலுஹாமித்தோட்டம் 94/1 (234) இல. வரிகட்டும் காணியின் பாகம் | தென்னந்தோட்டம் .. | சலாபம் சங்குட்டான்குடி (1) சொடலைமுத்து தேவர் நாகம்மா, (2) இ. முத்துதேவர் சின்னம்மா, (3) பிச்சைமுத்துதேவர் ராமு | 0 | 0 | 16·9 |
| 10 | ஈச்சம்பிட்டித்தரவை .. | பாழ்நிலம் .. | தெரியாது .. .. .. | 0 | 0 | 2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1938 ம் ஆண்டு (பெப்ருவரி) மாசி மாசம் 18 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு சலாபக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதுக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புத்தளம் கச்சேரி,
1937 ம் ஆண்டு (டிசெம்பர்) மார்கழி மீ 20 ந் உ.

ஜே. லயிற்,
உதவி அரசாட்சி ஏசண்டு, புத்தளம் சலாபம் பிரிவுகள்.

---

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.